1987 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது மருத்துவமனை அமைந்துள்ள இடம் குறுகியதாக இருப்பினும், நல்ல சுகாதாரமான நிலையில் பராமரிக்கப்பட்டு நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 10-20)

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் அரசு மருத்துவமனை குறுகிய இடத்தில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த அரசு மருத்துவமனையைப் பார்க்கும் போது குறுகிய இடத்தில் இருப்பதோடு மட்டுமல்லாமல் நெருக்கடியான கட்டிடங்களோடு நல்ல சுகாதாரம் இல்லாத நிலையிலும் இருப்பதாக எண்ணுகிறேன். அந்த வேலூர் மருத்துவமனைக்கு அருகிலேயே டி.பி. ஹாஸ்பிடலும் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நெருக்கடி நிலைமைகளை உணர்ந்து அந்த இடத்திலே புது மருத்துவமனை கட்டி அதை எக்ஸ்டென்ஷன் செய்து தர அரசு முன் வருமா? அதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த யோசனை தற்போது இல்லை.

திரு. கோ. இரகுபதி: தலைவர் அவர்களே, அத்தோடு மட்டுமல்லாமல் அங்கே அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்த அடுக்கு மாடிக் கட்டிடத்தை மேலும் உயர்த்துவதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லை என்றாலும் இனியாவது அங்குள்ள நெருக்கடியை உத்தேசித்து அந்தத் திட்டத்தைத் தீட்டித் தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்கு மாடிக் கட்டிடம் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

**நெல்லை மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் சாம்பவர் வட கரையில் அரசு மருத்துவமனை.**

51—(*வினா எண் 9185) திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் செங்கோட்டை ஒன்றியத்தில் உள்ள ''சாம்பவர் வடகரை'' பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் சாம்பவர் வடகரையில் இயங்கி வந்த அரசு மருந்தகத்தை செப்டம்பர் திங்கள் 1986-ல் ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

### தலைமைச் செயலக வளாகத்தில் உணவு விடுதி.

52—(*வினா எண். 4384)—திரு. பி. கே. எம். முத்துராம லிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலக வளாகத்திற்குள் தரமான உணவு விடுதி அமைக்க அரசு திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தலைமைச் செயலகத்தில் உணவு விடுதிகள் வேண்டப்படுவதில்லை. சிற்றுண்டி விடுதிகளே தேவைப்படுகின்றன. அவை தற்போது உள்ளன என்பதால் வேறு உணவு விடுதிகள் புதிதாக அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கே அமைந்திருக்கிற சிற்றுண்டி விடுதி குறிப்பிட்ட நேரத்திற்கு திறக்கப்படுவதே இல்லை. தரமான உணவு வழங்கப்படுவதும் இல்லை. சில அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருக்கும் அறையிலேயே ஸ்கூட்டரில் வந்து விடுகிறார்கள். அந்த ஆபத்தை தடுப்பதற்கும் தரமான உணவு வழங்கப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மிக அவசரமாக இருக்கிற காரணத்தால் ஸ்கூட்டரிலேயே வந்து சாப்பிட்டு விட்டு போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இங்கே ஏறத்தாழ 13 சிற்றுண்டி விடுதிகள் இருக்கின்றன. இந்த 13 சிற்றுண்டி விடுதிகள் போதும் என்ற காரணத்தால் தனியாக உணவகம் தேவையில்லை என்று சொன்னேன். அதை முறைப்படுத்த வேண்டுமானால் சம்பந்தப்பட்டவர்களிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கலாம்.